# காஞ்சிப் பல்லவர் காசுகள்

## (Coins of Kanchi Pallavs)

**மு.கயல்விழி,**

*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,*

*பச்சையப்பன்மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம் - 631502.*

ஆய்வுச் சுருக்கம்:

பல்லவர்கள் சங்கக் காலத்திற்குப் பின் வட தமிழ்நாட்டை ஆண்ட பெருவேந்தர்கள் ஆவர். அவர்கள் பல வகையான.காசுகளை வெளியிட்டு நாட்டின் பொருளியல் வளத்தைப் பெருக்கினர். பல்லவ நாட்டில் சீன மற்றும் ஈழக்காசுகளும் கிடைத்துள்ளன. பல்லவர் காசுகள் நாடு முழுவதும் பரவலாகக் கிடைக்கின்றன. இக்காசுகள் பலவிதச் செய்திகளை நமக்கு உணர்த்துகின்றன. எல்லாப் பல்லவ மன்னர்களும்.காசுகளை வெளியிட்டாலும் பல மன்னர்களின்காசுகள் இன்று வரை கிடைத்தில. பல்லவர்.காசுகள் அவர்தம் பொருளியல் அறிவை எடுத்துக்காட்டுகின்றன.

முன்னுரை:

இந்தியாவில் நாணயமுறை (Coin System)என்பது மிகவும் பழமை வாய்ந்ததாகும். ஆரம்பத்தில் இந்தியர்கள் பண்டமாற்று முறையை கையாண்டனர். அதில் பலவிதக் குறைகள் காணப்பட்டதால் அம்முறை கைவிடப்பட்டது. பின்னர் நாணயமுறை கைக்கொள்ளப்பட்டது. நமது நாட்டின் பழமை வாய்ந்த சிந்து சமவெளி நாகரிகத்தில் நாணயங்கள் பயன்படுத்தப்பட்டாலும் அவை ஒன்றுகூட இதுவரை கிடைத்தில. அதன் பின் வந்த ஆரியர் காலத்தின் நாணயங்கள் தான் முதன் முதலாகக் கிடைக்கப் பெறுகின்றன.அவர்கள் மத்திய ஆசியாவிலிருந்து வந்தவர்கள் என்பதாலும் கிரேக்க மற்றும் பாரசீக நாட்டினருடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் என்பதாலும் அவர்களைப் பின்பற்றி அதிக அளவு நாணயத்தை வெளியிட்டனர்{Sir Alexander Cunningham PP:31-32). "நிஷ்கா" (ARE.NO:181/1908),"சதமானம்"(M.A.Siddique P:13),"சொர்ணம்", "கார்ஷயப் பணம்"(ARE.NO:90/1908) போன்ற நாணயங்கள் அவர்களால் வெளியிடப்பட்டது. இவை பொதுவில் துளையிடப்பட்டமுத்திரை நாணயங்களாகும் (Punching Coins). அவை இந்தியா முழுவதும் புழங்கின. இவை தங்கம், வெள்ளி, தாமிரம் போன்ற உலோகங்களில் செய்யப்பட்டிருந்தாலும் வெள்ளியிலேயே அதிகம் கிடைக்கப்பெறுகின்றன. ஆரியருடைய நாணயங்கள் நமது தமிழ்நாட்டில் கரூர், கோயம்புத்தூர், தொண்டைமா நத்தம், போடி நாயக்கனூர் போன்ற இடங்களில் கிடைக்கப் பெற்றுள்ளன.

தமிழ்நாட்டிலும் ஆரம்பத்தில் பெருமளவு பண்டமாற்று முறையே (Barter System) கையாளப்பட்டுப் பின்பு நாணய முறை புழக்கத்திற்கு வந்தது. நாணயங்களின் வரலாறு சங்க காலத்திலிருந்து துவங்குகிறது. சங்க காலத்தில் தமிழ் பிராமி அல்லதுசங்ககாலத்தமிழ்(தமிழி) எழுத்தில் கிடைக்கப்பெற்றகாசுகளில் பெருவழுதி நாணயமும், கொல்லிப்புறைய, கொல்லிரும்புறை, மாக்கோதை போன்றகாசுகள் புகழ் பெற்றவை. மூவேந்தர்களைத் தவிர்த்துச் சங்கச் சிற்றரசர்களான திருக்கோவிலூர் மலையமான்களும் தகடூரின் அதியமான்களும் காசுகளை வெளியிட்டனர். இவை தவிர "அதின்னன் எதிரான் சேந்தன்" என்ற பெயருடைய யார் என்று ஊகித்தறிய இயலாத மன்னனின் காசுகளும் கிடைத்துள்ளன. முடியுடை வேந்தர் மூவருமே காசுகளை வெளியிட்டாலும் அவற்றிலிருந்து முழுமையான அல்லது தெளிவான செய்திகளை அறிந்து கொள்ள இயலவில்லை. களப்பிரர் காலம் இருண்ட காலம் (Dark Age) ஆகும் என்பதால் அதன் பின் வந்த பல்லவர் காலத்தில் வெளியிடப்பட்ட காசுகள்தாம் சற்றுத் தெளிவான

செய்திகளை அளிக்கின்றன. அவர்கள் வெளியிட்ட ஆரம்பக் கால காசுகள் பெரிதும்சாதவாகனர்களின் நாணயங்களை ஒத்திருக்கின்றன. மேலும் இவை சாதவாகன அரசன் "ஸ்ரீ வசிஷ்டப் புத்ர புலமாயின்" (Vasisthiputra Sri Pulamayin120-149A.D) என்பவன் வெளியிட்ட காசுகளை ஒத்திருக்கின்றன(C.Minakshi.P:92).

பல்லவரின் முற்கால நாணயங்களில் தேவநாகரி எழுத்துகள் காணப்படுகின்றன. முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன் போன்றோர் வெளியிட்ட காசுகள் தமிழிலும் வடமொழியிலும் காணப்படுகின்றன. அவர்கள் பல்வகையான நாணயங்களை வெளியிட்டாலும் பொன் நாணயங்கள் அரிதாகவே கிடைக்கின்றன. நம் நாட்டு மக்கள் பொற்காசுகளையும் பொன் அணிகலன்களையும் புதையலாய்க் கிடைத்தால் அதை மறைத்து உருக்கி நகைகளாய் மாற்றியதே இவ்வகை காசுகள் அரிதாய்க் கிடைப்பதற்குக் காரணமாகும். பல்லவர்களின் ஆட்சி பப்ப ராஜாவிடமிருந்து தொடங்கினாலும் சிவஸ்கந்தவர்மன், மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், இராஜசிம்மன், மூன்றாம் நந்திவர்மன், தந்திவர்மன் போன்றோர் வெளியிட்ட.காசுகள் மட்டுமே கிடைத்துள்ளன. பிற அரசருடையகாசுகள் யாவும் காலத்தால் அழிவுற்றன.கிடைத்துள்ள பல்லவருடைய நாணயங்கள் பலவகையான அரியச் செய்திகளைத் தாங்கி நிற்கின்றன.அவர்களின்காசுகள் கீழ்க்கண்ட செய்திகளை நமக்கு உணர்த்துகின்றன:

1.பல்லவரின் ஆட்சிப் பரப்பு

2.அவர்களின் செல்வ நிலை

3.அக்கால மொழி நிலை

4.அக்கால பொருளியல் நிலை

5.அவர்கள் பிறநாடுகளுடன் கொண்ட வணிகத் தொடர்பு

6.பல்லவ நாட்டின் சமய நிலை

7.பல்லவ மன்னர்களின் சிறப்புப்பெயர்கள்

எனவே பல்லவர் கால நிலையை அறிவிக்கும் சான்றாதாரங்களாக அவர்களின் காசுகள் திகழ்ந்து வருவதால் அது குறித்த ஆய்வு இக்கட்டுரையில் மேற்கொள்ளப்படுகின்றது.

பல்லவர் காசுகளின் இயல்புகள்:

பல்லவர்கள் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு தொண்டை நாட்டை (வட தமிழ்நாடு) ஆண்டதால் அவர்களின் காசுகள் வடதமிழ்நாட்டில் பரவலாகக் கிடைக்கின்றன. பொதுவில் அவை தென் தமிழ்நாட்டில் கிடைத்தில. அவர்தம்காசுகள்,

1.காஞ்சிபுரம்

2.ஆரணி

3.ஆற்காடு

4.கடலூர்

5.கரூர்

6.கும்பகோணம்

7.செஞ்சி

8.தஞ்சை

9.திருச்சி

10.தருமபுரி

11.தரங்கம்பாடி

12.திருவையாறு

13.திருவண்ணாமலை

14.பாபநாசம்

15.மதுரை

16.மாமல்லபுரம்

17.விழுப்புரம்

18.வேலூர்

போன்ற இடங்களில் கிடைத்துள்ளன. அதிக அளவு காசுகள் திருக்கோவிலூரிலும் கரூரிலும் கிடைத்துள்ளன. பல்லவரின் காசுகள் அவர்தம் தலைநகரான காஞ்சிபுரத்தில் செயல்பட்ட நாணயச் சாலையில் அச்சிடப்பட்டன. அவர்களுடைய நாணய வார்ப்புச் சாலையிலிருந்து (Mint) மூன்று வார்ப்புக் கருவிகளைச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறையினர் கண்டெடுத்தனர். இவ்விடத்திலிருந்தே நாணயங்கள் அச்சிடப்பட்டுப் பல்லவ நாடு முழுவதும் பரவலாக வினியோகிக்கப்பட்டது. அவர்கள் வெளியிட்டகாசுகள் பெரும்பான்மையானவை பல்லவக்கிரந்த எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளதாகஆய்வாளர்கள்கருதுவர்(R.Kannan P:6). பல்லவரின் காசுகள் நாடு முழுவதும் பரவலாகக் கிடைக்கின்றனவேயன்றி அவை ஓரிடத்துக் குவியலாகக் கிடைக்கப்பெற்றில.தொண்டைநாட்டில்கிடைக்கும் (வடதமிழ்நாட்டில்) பல்லவர்நாணயங்களைச்சிலஅறிஞர்கள்பண்டையதமிழ்க்குலத்தவரான (அல்லதுஆந்திரர்) குறும்பரின்(Kurumbas) நாணயங்களாகக்கருதிப்பட்டியலிடுவர்(Sir Walter Elliot. P:152).அதுசரியானதன்று. குறும்பர்கள்வேறுபல்லவர்கள்வேறு. குறும்பர்கள்அம்மண்ணின்பூர்வக்குடிகள்ஆவர், பல்லவர்களோபுலம்பெயர்ந்து(Emigrants)வந்தவர்களாவர்.

பல்லவர்களின்காசுகளை அறிஞர் பெருமக்கள் மகேந்திரவர்மனுக்கு முன், பின் என்று இருவேறாகப் பிரிக்கின்றனர். முதலாம் மகேந்திரவர்மனுக்கு முன்பு வெளியிடப்பட்ட காசுகளில் சின்னங்களைத் தவிர எழுத்து பொறிப்புகள் எதுவும் காணப்படவில்லை. முதன் முதலாக மகேந்திரவர்மனே எழுத்துப் பொறிப்புகளைத் தேவநாகரியில் பொறித்து வெளியிட்டான். அதன் பின் ஆட்சிபுரிந்த நரசிம்மவர்மன், இராஜசிம்மன், மூன்றாம் நந்திவர்மன், தந்திவர்மன் போன்றோரின்.காசுகள் அவர்களின் விருதுப் பெயர்களைத் தாங்கி வெளிவந்தன. இவ்வகை நாணயங்கள் பொன்னாலும் வெள்ளியாலும் செம்பாலும் செய்யப்பட்டன. முற்காலப் பல்லவரின் காசுகள் பெருமளவு ஈயக் காசுகளாகவே கிடைக்கின்றன. அதில் தவறாமல் திமிலுள்ள காளை

உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இக்காளை உருவம் அவர்கள் வெளியிட்ட பள்ளன் கோயில் செப்பேடுகளில் காணப்படும் காளை உருவத்தைப் பெரிதும் ஒத்துள்ளது(தமிழ்நாட்டுவரலாறு. பல்லவர், பாண்டியர்காலம். ப:385).பல்லவர்காசுகளில்"ஸ்ரீநிதி", "ஸ்ரீபரன்", "மானவரஸ்ரீ", "ஸ்ரீராஜ", "ஸ்ரீவிபு", "ஸ்ரீலக்ஷித", "ஸ்ரீசதா","சித்ர" போன்ற பெயர்கள் பல்லவக்கிரந்த எழுத்தில் முகப்பில்மீதுநந்தியின் மேல்பொறிக்கப்பட்டுள்ளன (ந.சௌந்திரபாண்டியன், ப:14).

பிற்காலப் பல்லவர் காசுகள் பொன்னால் செய்யப்பட்டு வெளியிடப்பட்டன. பொதுவாகக்காசுகள்யாவும்அரசினரால்உரியமுறையில்துளையிடப்பட்டபின்நன்குபரிசோதித்துவெளியிடப்பட்டன. அவை "காணம்", "பழங்காசு", "துளைப் பொன்", "விட்டேல் விடுகு பொன்" போன்றவையாகும். பழங்காசு என்பது தூய்மையான பொன்னால் செய்யப்பட்டது(ARE.NO:278/1902). எனவே இது மதிப்பு கொண்டதாகக் கருதப்பட்டது. துளைப் பொன் என்பது அரசினரால் துளையிடப்பட்டு அதன் தரம் நன்கு பரிசோதித்தபின் வெளியிடப்பட்டகாசாகும். பல்லவருடைய கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் பொற்காசு பற்றிய செய்திகள் அதிகம் காணப்படுவதால் இவ்வகைக் காசுகள் நாடுமுழுவதும் புழக்கத்தில் இருந்திருக்கவேண்டும். துளைப் பொன் என்பது துளையிடப்பட்ட பொற்காசாகும். விடேல் விடுகு பொன் என்பது துளையிடப்பட்ட செம்பும் பொன்னும் கலந்தகாசாகும்(ARE.NO:297/1902).விடேல் விடுகு காசு பற்றிய செய்தியைக் கல்வெட்டுகள் தவிர இலக்கியங்களும் உறுதி செய்கின்றன,

"வீடைத் தண் பொறியேல் விடேல் விடுகு"

(நந்திக் கலம்பகம்:13)

இது தவிரக் "கழஞ்சுக் காசு" என்ற ஒரு கழஞ்சு எடையுடைய பொற்காசும் புழக்கத்தில் இருந்தன. பல்லவர் காலத்தில் வெள்ளிக் காசுகள் அரிதாகவே கிடைக்கின்றன. கிடைத்த பல்லவர் காசுகள் அனைத்தையும் கொண்டு கூர்ந்து நோக்கும் போது தகரம் அதிகம் கலந்த வெங்கலக் காசுகளே (கலப்பினக் காசுகள்) அதிகம் கிடைக்கின்றன. இது தவிர அவர்கள் காலத்தில் மட்டமான காசுகளும் புழக்கத்தில் இருந்தன. அவை "கறைகொள் காசு" என்றழைக்கப்பட்டன. இதை "வாசி இன்றி" என்று அக்காலத்தைச் சார்ந்த ஞானசம்பந்தப் பெருமான் அழைக்கின்றார்,

"வாசி தீரவே காசு நல்குவீர்

மாசின் மிழலையீர் ஏச லில்லையே

இறைவ ராயினீர் மறைபொள் மிழலையீர்

கறைகொள் காசினை முறைமை நல்குமே"

(ஞானசம்பந்தர்பதிகம்:திருவீழிமிழலை-திருவிருக்குக்குறள்:1-2)

வாசி இன்றி என்பது வட்டமில்லாதது, அதாவது துளையில்லாதது என்பது பொருளாகும். துளையிட்டுக்காசுகளைவெளியிடுதல்அரசின்பணியென்பதால்அவ்வாறுதுளையிடாமல்வெளியிடப்பட்டகாசுகள்அரசினரால்வெளியிடப்பட்டாலும்அவைதரம்தாழ்ந்தவையாகக்கருதப்பட்டுவெளியிடப்பட்டதாகயூகிக்கவேண்டியுள்ளது.

பல்லவர் காசுகளின் எண்ணிக்கை:

பல்லவ வேந்தர்களின் காசுகள் தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கிடைக்கப்பெற்றுள்ளன. கால வெள்ளத்தில் அழிந்தது போக இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள பல்லவர்தம் காசுகளின் விவரம் வருமாறு:

அரசர்கள்எண்ணிக்கை

1.சிம்மவர்மன்11

2.சிம்மவிஷ்ணு2

3.மகேந்திரவர்மன்27

4.நரசிம்மவர்மன்6

5.இராஜசிம்மன்6

6.தந்திவர்மன்1

7.பெயரறியா பல்லவ

வேந்தர் காசுகள்27

பிற நாட்டவர் காசுகள்:

1.சீனக் காசுகள்20

2.இலங்கைக் காசுகள்2

பல்லவர் காசுகளின் எடையும் அளவும்:

பல்லவர் காசுகளின் எடைகள் வேறுபட்டுக் காணப்படுகின்றன. அவை,

1,ஈயக்காசுகள் 0.7 முதல் 9.8 கிராம் வரையும்,

2.செம்புக் காசுகள் 0.45 முதல் 5.2 கிராம் வரையும்,

3.வெங்கலக் காசுகள் 0.4 முதல் 5.7 கிராம் வரையும்,

4.தகரம் அதிகம் கலந்த வெங்கலக் காசுகள் 1.15 முதல் 7.2

கிராம் வரை எடையுடையதாயும் திகழ்ந்தன. பொதுவில் இக்காசுகளின் குறுக்களவு 0.7 செ.மீமுதல் 1.0 செ.மீவரையும், 1.2 செ.மீமுதல் 1.5செ.மீவரையும், 2.0 செ.மீமுதல்2.8 சென்டி மீட்டர் வரையும் காணப்பட்டன.

பல்லவர் காசுகளின் குறிப்புகள்:

பல்லவருடைய காசுகளில் பலவிதமான குறிப்புகள் பொறிக்கப்பட்டுள்ளன. திமிலுடைய காளை, சிங்கம், தளிருடைய செடி, பல்வகைப் பாத்திரங்கள், பாய்மரக் கப்பல்கள், ஸ்ரீ வஸ்தம், யானை, விதையுடன் கூடிய தளிர், வட்டத்துக்குள் சங்கு அல்லது சூரியன் கம்பிகள் உள்ள சக்கரத்தின் நடுவில் சிறு வட்டம், கொடிக்கம்பம், முக்கோண வடிவில் பறக்கும் கொடி போன்ற

பொறிப்புகள் காணப்படுகின்றன. காஞ்சிபுரத்தில் கிடைத்த காசில் ஒருபுறம் காளையும் மறுபுறம் ஸ்ரீ வஸ்தமும் பொறிக்கப்பட்டுள்ளன. எழுத்துகளற்ற இக்காசே அவர்களின் பழமையான காசாகக் கருதப்படுகின்றது. பொதுவில் முற்காலப் பல்லவர் வெளியிட்ட காசுகளின் முன்புறமும், பின்புறமும் சிங்க உருவமும், ஸ்திகமும் சங்கும் பொறிக்கப்பட்டுள்ளன.

முற்காலப் பல்லவ அரசரான சிம்ம விஷ்ணு வெளியிட்ட காசுகளில் புள்ளி வட்டத்துக்கள் சிங்கமும் அதன் முன் வில்லும் பின்புறம் மீனும் அதன் கீழ்ப் புலியும் பின்புறம் சக்கரத்தின் நடுவில் சிறுவளையமும் காணப்படுகின்றன. இதற்குப் பின்வந்த சிம்மவர்மன் காசுகளில் ஸ்ரீவஸ்தம், பிறை, சங்கு, பாம்பு, காளை போன்றவை பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வகை பொறிப்புகள் அவன் வெளியிட்ட விளவெட்டிச் செப்பேடுகளின் பொறிப்புகளுடன் ஒத்துப்போகின்றன. இவ்வகையான 11 காசுகள்கி.பி. 1970 இல் காஞ்சி காமாட்சியம்மன் கோயிலுக்கு அருகில் கிடைக்கப்பெற்றன. முதலாம் மகேந்திரவர்மனின் காசுகளில் பல்லவக் கிரந்த எழுத்துகள் (ஒரு சில தமிழில்) பொறிக்கப்பட்டுள்ளன. இதில் "கதாசித்ரா" என்ற வாசகம் காணப்படுகின்றது. இதைக் காடக-சித்ரா என்று பிரிக்கின்றனர். காடக என்பது காடவர்கோன் என்பதையும், சித்ரா என்பது சித்ரகாரப்புலி என்பதையும் குறிக்கும்(மா.இராசமாணிக்கனார். ப:235).இவ்விரு பெயர்களுமே மகேந்திரவர்மனைக் குறிக்கும் என்பதால் இக்காசுகளை அவன் வெளியிட்டிருத்தல்வேண்டும்என்பது உறுதி. அவன் வெளியிட்ட காசுகளில் புலி, வில், மீன் போன்ற பொறிப்புகளுடன் "உம்பு", "இலஷீத", "பகாப்பிடுகு", "உடுதி", "தண்டிகலா""திவிர", "சுரும்பு", "மெழி", "மமய", "தர்ப்பவல", "உகா", "ஸ்கலபாஜன", "மஹாமேக", "லலித்தாங்குர", "நஹிகாமுத்தஹ", "எரு", "சரப", "விதி" போன்ற நகரி எழுத்துகள் காணப்படுகின்றன. இவற்றின் பொருள் யாது என்று அறியப்படவில்லை. இத்துடன் திமிலுள்ள காளைகள், சக்கரம், ஸ்வஸ்திகம், சங்கு, இருபுறமும் விளக்கு, பூச்சாடி, ஒரு குடை, இரு குடை, புலி, மீன், ஸ்ரீவஸ்தம், சாமரம் போன்றவையும் பொறிக்கப்பட்டுள்ளன. இக்காசுகள் யாவும் வட்டவடிவினதாகக் காணப்படுகின்றன.

முதலாம் நரசிம்மவர்மன் தமிழ், வடமொழி இரண்டிலும் காசுகளை வெளியிட்டான். இக்காசுகளின் முன்புறம் திமிலுடைய காளையும், பின்புறம் "ஸ்ரீபர", "ஸ்ரீநிதி" போன்ற விருதுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இத்துடன் சிங்கம் அதன் மேல் திரிசூலம், அதன் கீழ்ப் பன்றி, அதன்பின் நெடுவாக்கில் இரு மீன்களும், குறுக்கு வாக்கில் ஒரு மீனும், நான்கு ஆரங்களுடைய சக்கரமும், பல ஆரங்களுடைய சக்கரங்களும், துறைமுகமும் பொறிக்கப்பட்டுள்ளன. இவனுடைய சில காசுகளில் "சிவசூடாமணி" என்ற பொறிப்பு காணப்படுகின்றது. சிவசூடாமணி என்பது நரசிம்மனின் சிறப்பு பெயராகும். இராஜசிம்ம பல்லவனின் காசுகள் நரசிம்மனின் காசுகளைப் பெரிதும் ஒத்து காணப்படுகின்றன. இக்காசுகளின் ஒரு புறம் பீடத்தின் மீது சங்கு பொறிக்கப்பட்டுள்ளது. இதைத் தேசிகாச்சாரி என்ற அறிஞர் சங்கு என்றும் எலியட் என்ற அறிஞர் பரிதியுடைய சூரியன் என்றும் குறிப்பிடுவார். இவ்வகை நாணயங்களில் "மானபபரா" என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது(SII.VOL:1, P:2). "அதிமனன்" என்ற இராஜசிம்மனின் சிறப்பு பெயரைக் கல்வெட்டுகள் குறிப்பிடுவதால் இது அவன் வெளியிட்ட நாணயம் என்பதை அறியமுடிகின்றது(Ep.Ind.Vol:10.P:6).

பிற நாட்டவர் காசுகள்:

பல்லவ நாட்டில் சீனக் காசுகளும் புழக்கத்திலிருந்தன. சீன மன்னன்."காய்-ஹீவென்"(Kai-Yuan-713-742) என்பவன் கி.பி. 720 இல் பல்லவர் அவைக்கு ஒரு தூதுக் குழுவை அனுப்பியது இதை உறுதிப்படுத்தும்(C.Minakshi.P:90). இதனால் இரு நாடுகளுக்கிடையே நெருங்கிய வணிகத் தொடர்பு

காணப்பட்டதை அறியலாம். பட்டுக்கோட்டைக்கு அருகில் உள்ள விகாமம் என்ற ஊரில் கிடைத்த 20 சீனக் காசுகள் இதை உணர்த்தும்(T.S.Sridhar & N.Sundhararajan. P:8). இது தவிர இலங்கை காசுகளும் பல்லவ நாட்டில் புழக்கத்திலிருந்தன. சென்னை அருங்காட்சியகத்தில் காணப்படும் இரு காசுகள் இவ்வகையைச் சார்ந்தவையே. இந்நாணயங்கள் இரண்டும் ஒழுங்கற்ற சதுர வடிவில் காணப்படுகின்றன. பல்லவர் நாணயங்கள் பொதுவில் வட்ட வடிவில் காணப்படும். இவை. இரண்டும் செம்பினால் ஆனவை. முதல் நாணயத்தின் முன்புறம் சிங்கமும் பின்புறம் ஏழுகிளைகளையுடைய போதி மரமும் பொறிக்கப்பட்டுள்ளது.அதனருகில் மணிகளாலான அலங்கரிப்பு காணப்படுகின்றது. இதன் எடை 2.94 கிராம் ஆகும். மற்றொரு வகை காசு 9.2 கிராம் எடையுடையது. இதன் முன்புறம் வேலியிட்ட போதி மரமும் அதனருகில் சின்னம் ஒன்றும் பொறிக்கப்பட்டுள்ளது. அதன் பின்புறம் பூரணக் கும்பமும் பொறிக்கப்பட்டுள்ளது. போதி மரத்தின் பொறிப்பு இக்காசுகள் பல்லவருடையதன்று என்பதைப் புலப்படுத்தும். முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில் இவ்விரு நாடுகளுக்கிடையே நெருங்கிய அரசியல் தொடர்பு காணப்பட்டது. பல்லவர் உதவியுடன் மானவர்மன் என்பவன் இலங்கையின் அரசனாக முடிசூடினான். எனவே இருநாடுகளிடையே நெருங்கிய வணிகத் தொடர்பு காணப்பட்டது. மேலும் இக்காசுகள் வட இலங்கையில் அதிகம் கிடைப்பதாக அறிஞர்கள் உரைப்பர். இவற்றால் சீன, ஈழக்காசுகள் பல்லவ நாட்டில் புழங்கியது உறுதியாகின்றது. டாக்டர் எலியட் அவர்கள் பல்லவர்கள் நாணயங்கள் குறித்து நன்கு ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு குறிப்பிடுவார்:

"பல்லவரின் காசுகள் என்று குறிப்பிடப்படுபவை யாவையுமே கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்குப் பின் வெளியிடப்பட்டவையே ஆகும். பொதுவாக இவ்வகையான நாணயங்களில் காளையும் இரண்டு பாய்மரங்களுடன் கூடிய கப்பலும் பொறிக்கப்பட்டுள்ளன. சில சமயம் காளைக்குப் பதில் சிங்கம் காணப்படும். இதன் பின்புறம் ஸ்வஸ்திகமும் விளக்கும் மீனும் வில்லும் குடையும் குதிரையும் சக்கரமும் சிங்கமும் சைத்தியமும் பொறிக்கப்பட்டிருக்கும். இந்நாணயங்கள் யாவும் நன்கு வடிவமைக்கப்பட்டுச் சிறப்பாக வார்க்கப்பட்டுள்ளன. இவை செம்பு, வெள்ளி போன்ற உலோகங்களில் அதிகம் கிடைக்கப்பெறுகின்றன. பொன் நாணயம் அதிகம் காணப்படவில்லை".

சிம்மவர்மன் காசு:

காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோயில் அருகில் சிம்மவர்ம பல்லனுடைய 11 காசுகள் கிடைத்துள்ளன. இதன் முன்புறம் புள்ளியிட்ட வட்டத்துள் சிங்கமும் அதன்முன் வில்லும் அதன் பின் மீனும் அதன் கீழ்ப் புலியும் காணப்படுகின்றது. இதன் பின்புறம் கம்பிகளாலான சக்கரத்தின் நடுவில் சிறுவட்டம் ஒன்றும் பொறிக்கப்பட்டுள்ளது. இந்நாணயத்தின் மூலம் சிம்மவர்மன் மூவேந்தர்களையும் வென்ற செய்தி பொறிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி. 570-580 ஆகும்.

சிம்ம விஷ்ணுவின் காசுகள்:



பல்லவ அரசன் சிம்ம விஷ்ணுவின் காசு கரூரில் கிடைக்கப்பெற்றுள்ளது. இதன் காலம் கி.பி. 557 -590 ஆகும். இதன் எடை 3.2 கிராம் ஆகும். இதன் முன்புறம் நிற்கும் சிங்கமும், அதற்கு மேல் சூலமும், சிங்கத்திற்குப் பின்னால் மீனும், சிங்கத்திற்குக் கீழே புலியும் பொறிக்கப்பட்டுள்ளன. இதன் பின்புறம் சக்கரம் ஒன்று காணப்படுகின்றது. இது வட்ட வடிவில் கலப்பு உலோகத்தால் செய்யப்பட்டுள்ளது.



திருக்கோவிலூரில் மற்றொரு சிம்ம விஷ்ணுவின் காசு கிடைத்துள்ளது. இது வட்டவடிவிலானது. இதன் எடை 6.5 கிராம் ஆகும். இதன் முன்புறம் நிற்கும் சிங்கமும், பின்புறம் வட்டதிற்குள் செங்குத்தான சங்கும் பொறிக்கப்பட்டுள்ளன.

மகேந்திரவர்மன் காசுகள்:



கும்பகோணத்தில் முதலாம் மகேந்திரவர்மனின் வட்ட வடிவிலான காசு ஒன்று கிடைத்துள்ளது. இதன் காலம் கி.பி. 590 முதல் 630 ஆகும். இது தமிழ் பல்லவக் கிரந்தத்தால் வடிவமைக்கப் பட்டுள்ளது. இதன் முன்புறம் காளை ஒன்றும், அதன் மேல் “தண்டிக்கல” என்ற பொறிப்பும் காணப்படுகின்றது. இதன் பின்புறம் பூவிதழ்களால் அலங்கரிக்கப்பட்ட வட்டம் ஒன்றும், அதனுள்ளே பூரணக் கும்பமும் காணப்படுகின்றது. இதன் எடை சுமார் 1.8 கிராம் ஆகும்.



கும்பகோணத்தில் கிடைக்கப்பெற்ற வட்ட வடிவிலான கலப்பு உலோகத்தில் செய்யப்பட்ட காசு முதலாம் மகேந்திரவர்மன் காலத்ததாகும். இது சுமார் 960 கிராம் எடையுடையது. இதன் முன்பக்கம் வலப்புறம் நிற்கும் காளையொன்றும், அதன் மேல் “பகா பிடுகு” என்ற பல்லவக் கிரந்தம் கலந்த எழுத்துப் பொறிப்பும் காணப்படுகின்றது. பின்புறம் வட்டத்தினுள் சங்கு ஒன்று செங்குத்தான நிலையில் காணப்படுகின்றது.



கரூரில் கிடைத்த முதலாம் மகேந்திரவர்மனின் காசு தமிழில் பொறிக்கப்பட்டுள்ளது. இது வட்ட வடிவில் கலப்பு உலோகத்தால் செய்யப்பட்டது. இதன் எடை 2 கிராம் ஆகும். இதன் முன்புறம் காளையின் மேல் “தம” என்று பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம் வலதுப் பக்கம் நோக்கி நிற்கும் மயில் ஒன்றுள்ளது. தம என்றால் “புலன்களை வென்றடக்கியவன்” என்று பொருள்.



கிருஷ்ணகிரி அடுத்த காவேரிப்பட்டினத்தில் கிடைத்த முதலாம் மகேந்திரவர்மனின் காசு சுமார் 2.20 கிராம் எடையுடையது. இது வடமொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் முன்புறம் காளையும் அதன் மேல் “சுரம்பூ” என்று பொறிக்கப்பட்டுள்ளது. இதன் பின்புறம் வட்டத்துக்குள் 2 வெண்சாமரங்களின் பொறிப்பு உள்ளது.



காஞ்சிபுரத்தில் முதலாம் மகேந்திரவர்மன் காசு ஒன்று கிடைத்துள்ளது. இது வட்ட வடிவில் 90 மில்லி கிராம் எடையுடையதாய் உள்ளது. இதன் முன்புறம் காளையும், அதன் மேல் “சலச் சித்த” என்று பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம் வட்டத்துக்குள் வில் உள்ளது. இதை “சகலச் சித்த” என்று பொருள் கொண்டால் “அனைத்துத் திறன்களையும் கொண்டவன்” என்பது பொருளாகும்.



மதுரையில் கிடைக்கப்பெற்ற காசு ஒன்று முதலாம் மகேந்திரவர்மன் காலத்தைச் சார்ந்தது. இதன் எடை 1.2 கிராம் ஆகும். இதன் முன்புறம் காளையின் மேல் “சலச் சித்த” என்று பொறிக்கப் பட்டுள்ளது. பின்புறம் வட்டத்துக்குள் செங்குத்தான வில் ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது.



முதலாம் மகேந்திரவர்மனின் காசு ஒன்று காஞ்சிபுரத்தில் கிடைக்கப்பெற்றுள்ளது. இது வட்ட வடிவில் 1.75 கிராம் எடையுடையது. இதன் முன்புறம் காளையும், அதன் மேல் “வுக” என்று பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம் வட்டத்துக்குள் செங்குத்தான நிலையில் இரண்டு குடைகள் பொறிக்கப்பட்டுள்ளது. வுக என்பது “வெஃகா” என்பதன் மரூஉ ஆகும். வெஃகா என்பது பண்டைய காஞ்சிபுரத்தின் பெயராகும்.



காஞ்சிபுரத்தில் கிடைத்த முதலாம் மகேந்திரவர்மனின் மற்றொரு காசு 1.3 கிராம் எடையுடையதாகும். இது தமிழில் பொறிக்கப் பட்டுள்ளது. இதன் முன்பக்கம் காளையின் மேல் “வுக” என்று பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம் தாமரைப்பூ இதழ் விரிந்து காணப்படுகின்றது. வுக என்பதை “வுங்க” என்றும் படிக்கலாம்.



கரூரில் கிடைத்த முதலாம் மகேந்திரவர்மனின் காசு 2.2 கிராம் எடையுடையது. இதன் முன்புறம் காளையும், அதன் மேல் “திவிய” என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம் அலங்கரிக்கப்பட்ட வட்டத்தினுள் சூரியனைச் சுற்றி 4 வளைவுகள் உள்ளன. இதில் உள்ள திவிய என்ற சொல் திவ்ய என்று கொண்டால் “உயர்ந்த” என்று பொருள் கொள்ளலாம்.



மாமல்லபுரத்தில் கிடைத்த முதலாம் மகேந்திரவர்மனின் காசு வட்ட வடிவில் உள்ளது. இதன் எடை 600 மில்லி கிராம் ஆகும். இது தமிழில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் முன்புறம் காளையும், அதன் மேல் “விதி” என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம் செங்குத்தான வாள் ஒன்றும் உள்ளது. விதி என்பதற்கு விதிகளை மதித்து நடக்கும் அரசன் என்பது பொருளாகும்.



முதலாம் மகேந்திரவர்மனின் காசு ஒன்று திருக்கோவிலூரில் கிடைக்கப்பெற்றுள்ளது. வட்ட வடிவிலான இக்காசு 2.5 கிராம் எடையுடையது. இதன் முன்புறம் காளையும் அதன் மேல் “தர்ப விஷ” என்று வடமொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் பின்புறம் வட்டத்திற்குள் செங்குத்தான குடை ஒன்று உள்ளது. குடையின் மேல் சூரியன், சந்திரன் போன்ற வடிவங்கள் காணப்படுகின்றன. தர்ப விஷ என்ற சொல்லுக்குப் “பிறரின் ஆணவத்தை அடக்குபவன்” என்பது பொருளாகும்.



கும்பகோணத்தில் கிடைக்கப்பெற்ற முதலாம் மகேந்திரவர்மனின் காசு வட்ட வடிவிலானது. இதன் எடை 1.25. கிராம். இது வடமொழியில் பொறிக்கப்பட்டு;ள்ளது. இதன் முன்புறம் காளையும், அதன் மேல் “ஸகலபாஜந” என்று பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம் சக்கரம் ஒன்று உள்ளது. ஸகலபாஜந என்ற சொல்லுக்கு “எல்லாம் உடையவன்” என்பது பொருள்.



தஞ்சாவூரில் கிடைத்த முதலாம் மகேந்திரவர்மனின் காசு தமிழில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் எடை 3.5 கிராம் ஆகும். இதன் முன்புறம் காளையும் அதன் மேல் “பகா பிடுகு” என்று பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம் சக்கரம் ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. “பகா பிடுகு” என்பதற்குப் “பிளக்கவியலாத இடிபோன்றவன்” என்பது பொருளாகும்.



கும்பகோணம் பட்டீஸ்வரத்தில் கிடைத்த காசொன்று கலப்பு உலோகத்தால் ஆனது. வட்ட வடிவமான இது மகேந்திரவர்மன் காலத்தைச் சார்ந்தது. இது 1.1 கிராம் எடையுடையது. இதன் முன்புறம் காளையும் அதன் மேல் “நீரபஷ” என்று வடமொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் பின்புறம் வில், மீன், புலி முதலிய பொறிப்புகள் உள்ளன. “நீரபஷ” என்ற சொல்லுக்கு “ஆசையற்றவன்” என்பது பொருள்.



முதலாம் மகேந்திரவர்மனின் காசு ஒன்று கும்பகோணம் பட்டீஸ்வரத்தில் கிடைத்துள்ளது. இது 2.5 கிராம் எடையுள்ளது. இதன் முன்புறம் காளையின் மேல் “வுபு” என்று வடமொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம் 2 குத்து விளக்குகளும் அதன் நடுவே செங்குத்தான சங்கு ஒன்றும் உள்ளது.



திருச்சியில் கிடைத்த வட்ட வடிவிலான காசு முதலாம் மகேந்திரவர்மன் காலத்தைச் சார்ந்தது. இதன் எடை 2.1 கிராம் ஆகும். இதன் முன்புறம் நிற்கும் காளையும், அதன் மேல் “வுபு” என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம் 2 குத்துவிளக்குகளும், அதன் நடுவே செங்குத்தான சங்கும் உள்ளது.



முதலாம் மகேந்திரவர்மனின் காசு ஒன்று திருக்கோவிலூரில் கிடைத்துள்ளது. இது வட்ட வடிவில் சுமார் 2.35 கிராம் எடையுடையது. இதன் முன்புறம் நிற்கும் காளையும் அதன் மேல் “ஸ்ரீ வம்பு” என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம் புலி, மீன், வில் ஆகிய பொறிப்புகள் உள்ளன. ஸ்ரீ வம்பு என்ற சொல்லிற்குப் “புதுமையைப் புகுத்தியவன்” என்பது பொருளாகும்.




கரூரில் கிடைக்கும் முதலாம் மகேந்திரவர்மனின் காசு 2.25 கிராம் எடையுடையது. இது வடமொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் முன்புறம் நிற்கும் காளையும், அதன் மேல் “ஸ்ரீ வம்பு” என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் பின்புறம் நிற்கும் புலியும், அதன் மேல் மீனும், அதற்கு அடுத்து வில்லும் பொறிக்கப்பட்டுள்ளன.



கும்பகோணம் அரசலாற்றில் முதலாம் மகேந்திரவர்மனின் காசு ஒன்று கிடைத்துள்ளது. இது வடமொழியில் காணப்படுகின்றது. இதன் எடை 1.8 கிராம் ஆகும். இதன் முன்பக்கம் நிற்கும் காளையும், அதன் மேல் “தண்டிக்கல” என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் பின்புறம் அலங்கரிக்கப்பட்டுள்ள வட்டத்தில் பூர்ணக் கும்பம் ஒன்று உள்ளது. “தண்டிகல” என்பதற்குச் “செங்கோல் ஆட்சியைத் திறமையாக நடத்துபவன்” என்பது பொருள்



மகேந்திரவர்மனின் காசு ஒன்று கரூரில் கிடைக்கப்பெற்றுள்ளது. இதன் எடை 2.45 கிராம் ஆகும். இது வடமொழியில் காணப்படுகின்றது. இதன் முன்புறம் நிற்கும் காளையும், அதன் மேல் "தண்டிகல" என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் பின்புறம் பூவிதழ்களால் அலங்கரிக்கப்பட்ட வட்டத்திற்குள் பூரணக் கும்பம் உள்ளது.




கும்பகோணத்தில் கிடைக்கப்பெற்ற முதலாம் மகேந்திரவர்மனின் காசு வட்ட வடிவிலானது. இதன் எடை 2.15 கிராம் ஆகும். இதன் முன்புறம் நிற்கும் காளையும், அதன் மேல் "லஷித" என்று பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம் வட்டத்திற்குள் 8 இதழ்கள் கொண்ட பூவொன்று பொறிக்கப்பட்டுள்ளது. "லஷித" என்பதற்குக் "குறிக்கோள்கள் உடையவன்" என்பது பொருள்.



கும்பகோணம்பட்டீஸ்வரத்தில் கிடைத்த முதலாம் மகேந்திரவர்மனின் காசு 1.2 கிராம் எடையுடையது. இது வட்ட வடிவில் வடமொழியில் காணப்படுகின்றது. இதன் முன்புறம் நிற்கும் காளையும், அதன் மேல் "சலசித்த" என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம் 2 விளக்குகளுக்கு நடுவில் உடுக்கை ஒன்றும் காணப்படுகின்றது. "சலசித்த" என்பதற்கு "மாற்று மனதினன்" என்பது பொருள்.



கும்பகோணம் அரசலாற்றில் கிடைத்த முதலாம் மகேந்திரவர்மனின் காசுவடமொழியில் காணப்படுகின்றது. இதன் எடை 2 கிராம் ஆகும். இதன் முன்புறம் நிற்கும் காளையும், அதன் மேல் "மகாமேஹ" என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம் வட்டத்தை நான்காகப் பிரித்து ஒவ்வொரு பிரிவிலும் 3 வளை முகடுகள் காணப்படுகின்றன. "மகாமேஹ" என்பதற்குக் "கார்மேகம்" என்று பொருள் கொள்ளலாம்.



கோவில்பட்டியில் கிடைத்த முதலாம் மகேந்திரவர்மனின் காசு 2.3 கிராம் எடையுடையது. இதன் முன்புறம் நிற்கும் காளையும், அதன் மேல் "லலிதாங்குர" என்று வடமொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம் வட்டத்திற்குள் ஸ்ரீ வஸ்தம் உள்ளது. "லலிதாங்குர" என்பதற்குப் "பொருத்தமான வழித்தோன்றல்" என்பது பொருள்.

International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 02 Issue: 04 October to December 2020 www.irjtsjournal.org



தஞ்சாவூரில் கிடைத்த நீள் வட்டத் தமிழ்க் கிரந்தக் காசு முதலாம் மகேந்திரவர்மன் காலத்தது. இதன் எடை 2.7 கிராம் ஆகும். இதன் முன்புறம் காளையின் மேல் "குணபர" என்று வடமொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம் 4 இதழ்கள் கொண்ட பூவிதழ் காணப்படுகின்றது. "குணபர" என்பதற்கு "நற்குணங்கள் நிறைந்தவன்" என்பது பொருள்.




திருச்சியில் கிடைத்த வட்டவடிவிலான காசு முதலாம் மகேந்திரவர்மன் காலத்தது. இதன் எடை 2 கிராம் ஆகும். இதன் முன்புறம் நிற்கும் காளையும், அதன் மேல் "நிஹிகாமுத்ரிக" என்று பொறிக்கப்பட்டுள்ளது. இதன் பின்புறம் செங்குத்தான நிலையில் பிரயோகச் சக்கரம் பூவிதழ்களால் அலங்கரிக்கப்பட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது. "நிஹிகாமுத்ரிக" என்பதற்குச் "சிற்றின்ப ஆசை இல்லாதவன்" என்பது பொருள்.



கும்பகோணம் பட்டீஸ்வரத்தில் கிடைத்த காசு வட்டவடிவில் ஆனது. இது 1 கிராம் எடையுள்ளது. இது வடமொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் முன்புறம் காளையும், அதன் மேல் "மாமய" என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம் சூரியனைச் சுற்றி 4 வளையங்கள் காணப்படுகின்றன. இது மகேந்திரவர்மன் வெளியிட்ட காசாகும்.

நரசிம்மவர்மன் காசுகள்:



கும்பகோணம் பட்டீஸ்வரத்தில் கிடைத்த முதலாம் நரசிம்மவர்மனின் காசு வட்ட வடிவில் கலப்பு உலோகத்தால் செய்யப்பட்டது. இதன் காலம் கி.பி. 630-668 ஆகும். இது 1.8 கிராம் எடையுடையது. இந்நாணயத்தின் முன்பக்கம் காளை ஒன்றும் அதன் மேல் "கடும் பிடுகு" என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் பின்புறம் பூரணகும்பம் ஒன்று உள்ளது. இது தமிழில் பொறிக்கப்பட்டுள்ளது.



கும்பகோணம் பட்டீஸ்வரத்தில் கிடைத்த முதலாம் நரசிம்மவர்மனின் காசு தமிழில் பொறிக்கப்பட்டுள்ளது. இது 1 கிராம் எடையுடையது. இதன் முன்புறம் காளையின் மேல் "கடும் பிடுகு" என்று பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம் 2 குத்து விளக்குகளும், அதன் நடுவில் பிரயோகச் சக்கரமும் பொறிக்கப்பட்டுள்ளது.



ஆற்காட்டில் கிடைத்த முதலாம் நரசிம்மவர்மனின் காசு வட்ட வடிவிலானது. இதன் எடை 1.1 கிராமாகும். இதன் முன்பக்கம் காளையின் மேல் “கடும் பிடுகு” என்றும், பின்புறம் வட்டத்திற்குள் வராகமும் பொறிக்கப்பட்டுள்ளது. “கடும் பிடுகு” என்றால் “கடுமையான இடி போன்றவன்” என்பது பொருளாகும்.



கும்பகோணம் அரசலாற்றில் கிடைத்த முதலாம் நரசிம்மவர்மனின் காசு வட்ட வடிவிலானது. இது சுமார் 1 கிராம் எடையுடையது. இதன் முன்பக்கம் காளையின் மேல் “மாமல்ல” என்ற சொல் வடமொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம் காளையின் மேல் சிவபெருமான் அமர்ந்திருப்பது போன்று பொறிக்கப்பட்டுள்ளது.



மாமல்லபுரத்தில் கிடைத்த முதலாம் நரசிம்மவர்மனின் காசு 700 மில்லி கிராம் எடையுடையது. இது வட்ட வடிவத்தில் கலப்பு உலோகத்தால் செய்யப்பட்டது. இதன் முன்பக்கம் காளையின் மேல் “மாமல” என்று வடமொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. பின் பக்கம் வட்டத்திற்குள் நான்கு இதழ்களைக் கொண்ட பூ ஒன்று உள்ளது.



முதலாம் நரசிம்மவர்மனின் காசு ஒன்று காஞ்சிபுரத்தில் கிடைத்துள்ளது. இது வட்ட வடிவத்தில் பல்லவக் கிரந்த எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் எடை 0.8 கிராம் ஆகும். இதன் முன்புறம் காளையின் மேல் “மாமல்ல” என்று பொறிக்கப்பட்டுள்ளது. இதன் பின்புறம் வட்டத்திற்குள் செங்குத்தான சங்கு ஒன்று உள்ளது.

இராஜசிம்மன் காசுகள்:



இராஜசிம்ம பல்லவனின் வெள்ளிக்காசு ஒன்று தஞ்சையில் கிடைத்துள்ளது. இதன் காலம் கி.பி.700-728 ஆகும். இது சுமார் 1.4 கிராம் எடையுடையது. இதன் முன்புறம் காளையும், அதன் மேல் “ஸ்ரீ நிதி” என்று பல்லவக் கிரந்த எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் பின்புறம் அலங்கரிக்கப்பட்ட வட்டத்துள் ஆரங்களுடைய வண்டிச் சக்கரம் காணப்படுகின்றது. “ஸ்ரீ நிதி” என்றால் “செல்வம் படைத்தவன்” என்பது பொருள்.




இராஜசிம்ம பல்லவனுடைய காசு ஒன்று கரூரில் கிடைக்கப்பெற்றுள்ளது. வட்ட வடிவிலான இது கலப்பு உலோகத்தால் செய்யப்பட்டது. இதன் எடை 1.6 கிராம் ஆகும். இதன் முன்பக்கம் காளையும் அதன் மேல் "ஸ்ரீ பர" என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் பின்பக்கம் வட்டத்துக்குள் இரண்டு மீன்கள் செங்குத்தாகக் காணப்படுகின்றது.



கரூரில் கிடைத்த மற்றொரு இராஜசிம்மனின் காசு 1.25 கிராம் எடையுடையது. இதன் முன்புறம் காளையும், அதன் மேல் "ஸ்ரீ பர" என்றும், இதன் பின்புறம் இரண்டு மீன்களும் காணப்படுகின்றன. "ஸ்ரீபர" என்ற சொல்லுக்குச் "செல்வத்தைத் தாங்கியுள்ளவன்" என்பது பொருளாகும்.



கும்பகோணம் அரசலாற்றில் பல்லவன் இராஜசிம்மனின் காசு ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது. இது பல்லவக் கிரந்த எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இது சுமார் 650 மில்லி கிராம் எடையுடையது. இதன் முன்புறம் காளையொன்றும் அதற்கு மேல் "ஸ்ரீ நிதி" என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் பின்புறம் வட்டத்திற்குள் வண்டிச் சக்கரம் ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது.



பல்லவன் இராஜசிம்மனின் காசு ஒன்று ஆற்காட்டில் கிடைத்துள்ளது. இது வடமொழியில் காணப்படுகின்றது. வட்டவடிவிலான இது கலப்பு உலோகத்தால் செய்யப்பட்டது. இதன் எடை 650 மில்லி கிராமாகும். இதன் முன்புறம் காளையும், அதன் மேல் "ஸ்ரீ நிதி" என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம் வட்டத்திற்குள் ஸ்வஸ்திகா பொறிப்பு உள்ளது.

தந்திவர்ம பல்லவன்காசுகள்:



பல்லவ மன்னன் தந்திவர்மன் காசு ஒன்று திருவையாறில் கிடைத்துள்ளது. இதன் காலம் கி.பி.729-746 ஆகும். கலப்பு உலோகத்தால் செய்யப்பட்ட இது 2.2 கிராம் எடையுடையது. கிரந்த எழுத்தில் இந்நாணயம் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் முன்பக்கம் காளையும், அதன் மேல் "தந்திஹி" என்றும், பின்பக்கம் சக்கரமும் பொறிக்கப்பட்டுள்ளது. தந்திஹி என்பதைத்தந்திவர்மன் என்று கொள்ள வேண்டும்.

பல்லவரின் பிற காசுகள்:

பல்லவ மன்னர்கள் வெளியிட்ட, ஆனால் யாருடைய காலத்தது என்று அறியவியலா காசுகள் பல கிடைத்துள்ளன. அவை நாடு முழுவதும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு:



காஞ்சிபுரத்தில் கிடைத்த வட்ட வடிவிலான பல்லவர் காசு சுமார் 200 மில்லி கிராம் எடையுடையது. இதன் காலம் கி.பி. 6 ஆம் நூற்றாண்டு என்று கணிக்கப்படுகிறது. இதன் முன்புறம் சக்கரத்தினுள் சாவி இருப்பது போன்றும் பின்புறம் காளை உருவமும் பொறிக்கப்பட்டுள்ளது. இது கலப்பு உலோகத்தால் செய்யப்பட்டது.



காஞ்சிபுரத்தில் கிடைத்த மற்றொரு செம்புக் காசு வட்ட வடிவினது. இது 1.54 கிராம் எடையுடையது. இதன் முன்புறம் சங்கு போன்ற முத்திரையும் பின்புறம் காளை உருவமும் பொறிக்கப்பட்டுள்ளது. இக்காளையின் மேல் ஸ்ரீ வத்ஸ் சக்கரம் மற்றும் பாம்பின் உருவம் நெளிகோடாக வடிவமைக்கப்பட்டுள்ளது.



கரூரில் கிடைத்த வட்ட வடிவிலான ஈயக்காசு கி.பி. 6 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதன் முன்புறம் நிற்கும் காளையும், பின்புறம் தலவிருட்சமும் உள்ளது. அதன் இடப்புறத்தில் ஒரு பாத்திரம் செதுக்கப்பட்டுள்ளது. இதன் எடை 5.8 கிராம் ஆகும்.



கும்பகோணம் அரசலாறு பகுதியில் கிடைக்கப்பெற்ற மற்றொரு கலப்பு உலோகத்தாலான காசு வட்ட வடிவினது. இது கி.பி. 7 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இது 600 மில்லி கிராம் எடையுடையது. அதன் முன்புறம் காளையும், அதன் மேல் பிறைச்சந்திரனும் உள்ளன. அதன் பின்புறம் அலங்கரிக்கப்பட்ட வட்டத்தினுள் கோயில் பொறிப்பொன்று உள்ளது.



கரூரில் கிடைக்கப்பெற்ற மற்றொரு காசில் நிற்கும் காளையின் மேல் ஸ்ரீ வஸ்தமும் அதன் பின்புறம் இரு பாய்மரங்கள் உடைய கப்பலும் செதுக்கப்பட்டுள்ளன. இது வட்ட வடிவத்துடன் கலப்பு உலோகத்தால் செய்யப்பட்டது.

இது சுமார் 2.3 கிராம் எடையுடையது.




திருக்கோவிலூரில் கிடைக்கப்பெற்ற மற்றொரு காசு கி.பி. 7 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதன் ஒருபுறம் நிற்கும் காளையும், மறுபுறம் மரம் ஒன்றில் பல கிளைகள் விரிந்தும் காணப்படுகின்றது. இது தல விருட்சம் என்று கருதப்படுகின்றது. இது கலப்பு உலோகத்தால் செய்யப்பட்டதாகும். இதன் எடை 2.9 கிராம் ஆகும்.



திருக்கோவிலூரில் கிடைக்கப்பெற்ற வட்ட வடிவிலான காசு சுமார் 3.7 கிராம் எடையுடையது. இதன் காலம் 7 ஆம் நூற்றாண்டாகும். இதன் முன்புறம் காளையும், அதன் மேல் ஸ்ரீ வஸ்தம், சங்கு, பிறை, பாம்பு போன்ற உருவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இதன் பின்புறம் தாழம்பூவின் நடுவிலிருந்து செங்குத்தாக உள்ள கொடிக்கம்பத்தின் உச்சியில் கொடிபறப்பதாகப் பொறிக்கப்பட்டுள்ளது.



திருக்கோவிலூரில் கிடைத்த மற்றொரு வட்ட வடிவிலான காசு கலப்பு உலோகத்தால் ஆனது. இதன் முன்புறம் நிற்கும் காளையும், பின்புறம் சிவலிங்கமும் காணப்படுகின்றது. இதன் எடை சுமார் 2.15 கிராம் ஆகும். இது 7 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நாணயமாகும்.



திருக்கோவிலூரில் கிடைத்த வட்ட வடிவிலான காசு 3.2 கிராம் எடையுள்ளது. இதன் முன்பக்கம் ஸ்ரீ வஸ்தம், சங்கு, பிறை, பாம்பு போன்ற உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பின் பக்கம் வட்டத்துக்குள் சங்கு உள்ளது.



திருக்கோவிலூரில் கிடைத்த கலப்பு உலோகத்திலான காசு கி.பி. 7 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதன் எடை 2.5 கிராம் ஆகும். இதன் முன்பக்கம் காளையும், அதன் மேல் ஸ்ரீ வஸ்தமும், சங்கு, பிறை, பாம்பு போன்றவையும் காணப்படுகின்றன. இதன் பின் பக்கம் அலங்கரிக்கப்பட்ட வட்டத்துள் சங்கு பொறிக்கப்பட்டுள்ளது.



திருக்கோவிலூரில் கிடைத்த வட்ட வடிவிலான காசு கி.பி. 7 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதன் எடை 5.45 கிராம் ஆகும். இதன் முன் பக்கம் ஸ்ரீ வஸ்தம், சங்கு, பிறை, பாம்பு

போன்றவையும் பின்பக்கம் அலங்கரிக்கப்பட்ட வட்டத்துக்குள் சக்கரம் ஒன்றும் பொறிக்கப்பட்டுள்ளது.



திருக்கோவிலூரில் கிடைத்த கி.பி. 7 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வட்ட வடிவக் காசு 2.95 கிராம் எடை உள்ளது. இதன் முன்புறம் காளையும், அதன் மேல் ஸ்ரீவஸ்தம், சங்கு, பிறை, பாம்பு போன்ற உருவங்களும் காணப்படுகின்றன. பின்பக்கம் சிறிய வட்டத்திலிருந்து சூரியக் கதிர்கள் வெளிப்படுவது போன்று பொறிக்கப்பட்டுள்ளது.



திருக்கோவிலூரில் கிடைத்த வட்ட வடிவிலான காசு கி.பி. 7 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இது 3.5 கிராம் எடையுடையது. இதன் முன்புறம் காளையும் அதன் மேல் சங்கு, ஸ்ரீ வஸ்தம், பிறை, பாம்பு போன்றவற்றுடன் காளையின் முன் சிறு கோலும் பொறிக்கப்பட்டுள்ளன. பின்பக்கம் வட்டத்திற்குள் ஸ்வஸ்திக் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.



திருக்கோவிலூரில் கிடைத்த வட்ட வடிவிலான கலப்பு உலோகக் காசு கி.பி. 7 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதன் முன்பக்கம் காளையும், அதன் மேல் பிறையும் உள்ளது. பின்பக்கம் ஸ்வஸ்திக் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.



கரூரில் கிடைத்த கி.பி. 7 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வட்ட வடிவிலான காசு 2.75 கிராம் எடையுடையது. இதன் முன்புறம் நிற்கும் காளையும், பின்புறம் வட்டத்தினுள் ஸ்ரீ வஸ்தமும் காணப்படுகின்றன.



திருக்கோவிலூரில் கிடைத்த கலப்பு உலோகத்தாலான காசு 3.45 கிராம் எடையுடையது. இதன் முன்புறம் காளையும், அதன் மேல் ஸ்ரீ வஸ்தமும், சங்கு, பிறை போன்றவை காணப்படுகின்றன. பின்புறம் வட்டத்துக்குள் ஸ்ரீ வஸ்தம் உள்ளது.




திருக்கோவிலூரில் கிடைத்த வட்ட வடிவிலான காசு 3.8 கிராம் எடையுடையது. இதன் முன்புறம் நிற்கும் காளையும், பின்புறம் கைப்பிடியுடன் கூடிய பாத்திரமும் காணப்படுகின்றன. இது கலப்பு உலோகத்தால் செய்யப்பட்டது.



கும்பகோணம் பட்டீஸ்வரத்தில் கிடைத்த கலப்பு உலோகக் காசு கி.பி. 7 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதன் எடை 1 கிராம் ஆகும். இதன் முன்புறம் காளையின் மேல் தெளிவற்ற இரண்டு எழுத்துகள் உள்ளன. அது யாது என்று அறிய இயலவில்லை. அதன் பின்புறம் கோப்பையிலிருந்து திரவம் பொங்கி வழிவது போன்று செதுக்கப்பட்டுள்ளது.



கும்பகோணத்தில் கிடைத்த வட்ட வடிவிலான காசு கலப்பு உலோகத்தால் செய்யப்பட்டது. இது 1.5 கிராம் எடையுடையது. இதன் முன்புறம் நிற்கும் காளையும், அதன் பக்கத்தில் தெளிவில்லா எழுத்துகளும் காணப்படுகின்றன. இவ்வெழுத்துகளைப் படித்தறிய இயலவில்லை. இதன் பின்பக்கம் கட்டங்கள் செதுக்கப்பட்டுள்ளன.




காஞ்சிபுரத்தில் கிடைத்த காசு ஒன்று வட்டவடிவினது. இது 750 மில்லி கிராம் எடையுடையது. இதன் முன்புறம் மன்னன் ஒருவனின் மார்பளவு உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம் பொறிப்பேதும் காணப்படவில்லை.



விழுப்புரத்தில் கிடைத்த காசு ஒன்று வட்ட வடிவில் கலப்பு உலோகத்தாலானது. இதன் காலம் கி.பி. 7 ஆம் நூற்றாண்டாகும். இது 500 மில்லி கிராம் எடையுடையது. இதன் முன்பக்கம் நிற்கும் காளையும், அதன் மேல் 3 பானைகளும் உள்ளன. பின்புறம் செங்குத்தான அங்குசம் ஒன்று காணப்படுகின்றது.




கும்பகோணம் அரசலாறு பகுதியில் கிடைத்த காசு வட்ட வடிவிலானது. இது 550 மில்லி கிராம் எடையுடையது. இதன் முன்புறம் நிற்கும் காளையும், பின்புறம் வட்டத்துக்குள் அரச இலையும் உள்ளன.



கும்பகோணத்தில் கிடைத்த ஒரு கிராம் எடையுள்ள காசு கி.பி. 7 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதன் முன்பக்கம் நிற்கும் காளையும், பின்பக்கம் வட்டத்துக்குள் செங்குத்தான குடையும் குடையின் மேல் சூரியச் சந்திரரும் பொறிக்கப்பட்டுள்ளது.




கும்பகோணம் பட்டீஸ்வரத்தில் கிடைத்த வட்ட வடிவிலான காசு சுமார் 0.7 கிராம் எடையுடையது. இதுவும் கி.பி. 7 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததே. இதன் முன்பக்கம் நிற்கும் காளையும் பின்பக்கத்தில் 2 குத்து விளக்குகளும் அதற்கு நடுவே ஒரு கண்ணாடியும் உள்ளன.



கும்பகோணம் பட்டீஸ்வரத்தில் கிடைத்த வட்டவடிவிலான காசு கி.பி. 7 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இது சுமார் 0.2 கிராம் எடையுடையது. இதன் முன்பக்கம் நிற்கும் காளையும், அதனருகில் தெளிவில்லாத எழுத்துகளும் உள்ளன. பின்புறம் இடது பக்கத் தலையுடனும், வலது பக்க வாலுடனும் நாகம் ஒன்று படமெடுப்பது போன்ற பொறிப்பு உள்ளது.



கும்பகோணம் பட்டீஸ்வரத்தில் கிடைத்த காசு கலப்பு உலோகத்தால் ஆனது. வட்ட வடிவில் உள்ள இது 0.5 கிராம் எடையுடையது. இக்காசின் முன்புறம் நிற்கும் காளையும், தெளிவில்லாத எழுத்துக்களும் உள்ளன. இதன் பின்புறம் செங்குத்தான திரிசூலம் ஒன்று உள்ளது.



கி.பி. 7 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த காசு ஒன்று காஞ்சிபுரத்தில் கிடைக்கப்பெற்றுள்ளது. வட்ட வடிவம் கொண்ட இது 350 மில்லி கிராம் எடையுடையது. இதன் முன்பக்கம் இடப் புறம் நோக்கி நிற்கும் காளை ஒன்றும், பின்பக்கம் வட்டத்துக்குள் மான் ஒன்றும் பொறிக்கப்பட்டுள்ளன.

முடிவுரை:

காசுகள் பொருளாதாரத்தின் அடிப்படை அலகுகள் ஆகும். காசுகள் அல்லது பணம் இன்றி மனித வாழ்வு இயங்காது. ஆரம்பத்தில் பண்டமாற்று முறை பரவலாகக் கையாளப்பட்டது. அதன் பின்பு பொன், வெள்ளி, செம்பு, செப்பு நாணயங்களுடன் தோல் நாணயங்களும் வெளியிடப்பட்டன. காசுகள் அல்லது நாணயங்களின் இன்றியமையாத தன்மையை உணர்ந்த பல அரசர்கள் அதில் ஆர்வம் கொண்டு பல சீர்திருத்தங்களை மேற்கொண்டனர். சான்றாகச் சீனாவின் குப்ளாய்கானும்

(Kublai Khan:1260-1294.A.D) இந்தியாவின் முகமது பின் துக்ளக்கையும் (Muhammad bin Tughluq:1325-1351.A.D) கொள்ளலாம். நம் நாட்டிலும் ஏராளமான காசுகள் வெளியிடப்பட்ட போதிலும் பாதுகாப்பு இன்மையால் அவையெல்லாம் காலவெள்ளத்தில் அழிவுற்றன. மேல் நாடுகளில் நாணயவியல் (Numismatics) என்ற துறை சிறப்புடன் செயல்பட்டு அவர்கள் பழம் நாணயங்களை உயிர் போன்று பாதுகாத்ததால் அவை அழிவினின்று தப்பித்தன. ஆனால் நம் நாட்டின் நிலை அவ்வாறு இல்லை

இந்த நிலையில் மேலைநாட்டு அறிஞர்களான கன்னிங்ஹாம்(Alexander Cunningham),எலியட் (Walter Elliot), ஜேம்ஸ் பிரின்செப் (James Prinsep) போன்றோரும் நம்நாட்டு தேசிகாச்சாரி (T.Desikachari), கிருஷ்ணமுர்த்தி (R.Krishnamoorthy) போன்றோரும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கிடைத்த அரிய நாணயங்களைப் பத்திரப்படுத்தி அவற்றை அழிவிலிருந்து காத்தனர். அருந்தமிழ் நூல்களை அழிவிலிருந்து காத்த தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாத ஐயரின் பணியினைப் போன்றே இவர்களின் பணியும் போற்றுதற்குரியது. அவ்வாறு தொகுக்கப்பட்ட பல்லவரின் நாணயங்கள் தொல்லியல் சான்றுகள் உணர்த்தாத பல அரிய செய்திகளை நமக்கு உணர்த்தி நிற்கின்றன. சான்றாக நந்தி அல்லது காளை பொறிப்பு அவர்கள் சைவர்கள் என்பதையும் பாய்மரங்கள் கொண்ட கப்பல், துறைமுகம் மற்றும் நண்டு போன்றவை அவர்களின் கடல் வணிகச் சிறப்பையும் வெண்கொற்றக் குடை அவர்களின் வலிமை மிக்க ஆட்சியையும் குதிரை, காளை போன்றவை அவர்களின் ஆற்றலையும் புலி, மீன், வில் போன்ற குறிப்புகள் அவர்கள் முடியுடை மூவேந்தர்களையும் அடக்கி ஆண்டதையும் நமக்கு உணர்த்துகின்றன. அவர்களின் பிற்கால நாணயங்களில் காணப்படும் சங்கு முத்திரை பிற்காலப் பல்லவர்கள் வைணவர்கள் என்பதைப் புலப்படுத்துகின்றன. சில நாணயங்களில் பொறிக்கப் பட்டுள்ள சிங்க முத்திரை அவர்களின் வலிமையைக் குறிப்பதுடன் ஆரத்துடன் உள்ள சக்கரங்கள் அசோகரைப் போன்று அவர்கள் நடத்திய தரும ஆட்சியையும் உணர்த்தும்.

சில நாணயங்களில் காணப்படும் விகாரைகள்(Buddhist&JainistMonastery) அக்காலத்தில் நிலவிய புத்த (Buddhism), சமணச் சமயத்தின் (Jainism) ஆதிக்கத்தை உணர்த்துகின்றன. இந்நாணயங்களில் காணப்படும் தேவநாகரி எழுத்துகள் அக்காலத்தில் காணப்பட்ட வடமொழியின் ஆதிக்கத்தைப் புலப்படுத்தும். முற்காலப் பல்லவர் காசுகள் யாவும் வடமொழியிலும் பிற்காலப் பல்லவர் காசுகள் தமிழிலும் பொறிக்கப்பட்டது அவர்கள் ஆரம்பத்தில் வடமொழியைத் (Sanskrit) தீவிரமாக ஆதரித்ததும் காலப்போக்கில் அதைக் கைவிட்டுத் தமிழைப் பின்பற்றியதையும் உணர்த்தும். முற்காலப் பல்லவர் காசுகள் பொன்னால் செய்யப்பட்டும் பிற்காலத்தில் அவை அருகிச் செம்புக் காசுகள் அதிகம் புழக்கத்திலிருந்தது அவர்கள் நிகழ்த்திய இடைவிடாத போர்களால் நாட்டின் செல்வவளம் குன்றியதைக் காட்டி நிற்கும். பல்லவ வேந்தர்கள் சீன மற்றும் ஈழக் காசுகளைத் தம் நாட்டில் புழங்கவிட்டு வணிக வளத்தினையும் பணப் புழக்கத்தையும் பெருக்கினர். பல்லவ வேந்தர்கள் பொருளியல் அறிவு வாய்ந்தவர்கள் என்பதற்கு அவர்கள் வெளியிட்ட காசுகளே சாலச்சிறந்தசான்றாகும்சான்றாகும். அவ்வேந்தர்கள் தம் காசுகள் மூலம் தம் காலத்தைச் சேர்ந்த பல செய்திகளைப் பின் வரும் தலைமுறையினர் அறியும் வண்ணம் பொறித்து விட்டுச்சென்றது அவர்தம் மதியூகத்தை உணர்த்தும் செயலாகும்.இவ்வாறு பல்வகையில் சிறப்புற்ற பல்லவர் காசுகள் இடைக்காலத் தமிழகத்தின் பொருளியல் நிலையைத் தெளிவுற எடுத்துரைக்கும் காலக் கண்ணாடியாகும்என்பதில்எள்ளளவும்ஐயமில்லை.

சுருக்கம் (Abbrevations):

[1] ARE-Annual Report on Indian Epigraphy

[2] SII-South Indian Inscriptions

[3] Epi.Gra.Ind-Epigraphica Indica

பார்வைநூற்பட்டியல்:

[4] Sir Walter Elliot, (1970), Coins of Southern India, Varanasi: Prithivi Prakasan

[5] Sir Alexander Cunningham, (1891), Coins of Ancient India, London: B.Quaritch ,15 Piccadilly

[6] Sir Alexander Cunningham, (1891), Coins of Medieval India, London: B.Quaritch ,15 Piccadilly

[7] T.Desikachari, (1933), South Indian Coins, Trichinopoly: St Joseph's Industrial School Press

[8] C.Minikshi, (1938), Administration and Social Life Under the Pallavas, Chennai: University of Madras

[9] T, S, Sridhar & N.Sundhararajan, (2011), Foreign Coins in the Collection of Government Museum, Chennai, Chennai: Government Museum.

[10] R.Kannan, (2003), Manual on the Numismatic Gallery of Government Museum, Chennai, Chennai:Government Museum

[11] M.A.Siddique, Coins of India through Ages, Chennai: Government Museum.

[12] புலவர்நடராஜன், (2014), திருஞானசம்மந்தர்தேவாரம், சென்னை: உமாபதிப்பகம்

[13] நந்திக்கலம்பகம், (2017), சென்னை: சாரதாபதிப்பகம்

[14] மா.இராசமாணிக்கனார், (2000), பல்லவர்வரலாறு, சென்னை: திருநெல்வேலிசைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகம்

[15] தமிழ்நாட்டுவரலாறு- பல்லவர், பாண்டியர்காலம், (2000), சென்னை: தமிழ்வளர்ச்சிஇயக்ககம்

[16] சௌந்திரபாண்டியன், (2011) நாணயவியல், சென்னை: அரசு அருங்காட்சியகவெளியீடு.